3. அறிவிப்புகள்.

(அ) கேள்வி நேரம் முடிவுற்றவுடன் சில பொதுப் பிரச்சினைகளை எழுப்புவது குறித்த நடைமுறைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. வினா நேரம் முடிந்ததும் பல உறுப்பினர்கள் சில செய்திகளை எழுந்து பேச வேண்டுமென்று விரும்புகிறார்கள், முனைகிறார்கள். இது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதுகுறித்து ஏற்கெனவே அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவை நான் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். நேற்று அவை முடிந்த பிறகு, இன்று அவை தொடங்குவதற்குள் ஏதேனும் உடனடியாக உணர்த்தப்படக் கூடியவை அல்லது உணர்த்தித்தான் ஆக வேண்டும் என்பது போன்ற இன்றியமையாத செய்திகள் மட்டும் என்னுடைய இசைவைக் கேட்காமல் எழுப்பப்பட்டால் கூட உடனடியாக அதற்கு அனுமதி வழங்கப்படும். ஆனால் முன்கூட்டியே சிலபேர் சில செய்திகளைச் சொல்லி அனுமதி கேட்கும் மரபும் இருக்கிறது. இரண்டுக்கும் அனுமதி வழங்கப்படும். அது இல்லாமல் "சீரோ அவர் (Zro-ho r)" முடிந்த உடனேயே ஏதாவது சில பிரச்சினைகளை ஓய்வாகப் பேசிக்கொண்டு இருக்கலாம் என்ற உணர்வு தோன்றி விடுமானால் இன்றைய அலுவல்கள் மட்டுமல்லாமல் என்றைய அலுவல்களையும் முழுமையாக முடிக்க முடியாது என்பது மட்டுமல்லாமல் மொத்தத்தில் பல பேச்சாளர்கள் பேச விரும்புவதால் அவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லி முடிகிறபோது கிட்டத்தட்ட $2\frac{1}{2}$ மணிக்கு மேலே தாண்டி விடுகிறது. பிற்பகல் மறுபடியும் அவைக்கு வருகிறபோது இடைவெளி நேரக் குறைவு ஏற்பட்டு விடுகிறது. எனவே இவற்றையும் கவனத்தில் கொண்டு இன்றைக்கு செய்தித் துறை, தொழிலாளர் நலத் துறை போன்ற மானியக் கோரிக்கைகள் வருவதால் அதில் அதிகம் பேர் பங்கு கொண்டு தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்ற வாய்ப்பினை நீங்கள் உருவாக்க வேண்டும். இதுபோல நேரத்தை ஒவ்வொருவரும் இறுக்கமாகக் கடைப்பிடித்தால் அவையைச் சிறப்பாக நடத்திச் செல்லலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-10)

4. தகவல் கோரல்.

(அ) வறட்சி நிவாரணம் குறித்து அரசின் நடவடிக்கைகள்.

*திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது தமிழகத்தில் கடுமையான வறட்சி நிலவிக் கொண்டு வருகிறது. குடிநீர்த் தட்டுப்பாடும், வேலை வாய்ப்பு